**கவனிக்க.**- *25.10.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1835 - 2013 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2013.11.01

*1835 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1471* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகாூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

நில அளவைத் திணைக்களம்

**நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்ப மட்ட தேர்ச்சி அற்ற (PL 01 - 2006 A) பதவி வகைக்கான ஆட்சேர்ப்பு**

1. நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட தேர்ச்சி அற்ற (PL 01 - 2006 A) பதவி வகைக்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமைகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1

| ஆட்சேர்ப்புக்கான பதவி | வெற்றிடங்களின் தொகை | தரம் |
|---|---|---|
| 1. திணைக்களத் தொழிலாளர் | 09 | III ஆம் தரம் |
| 2. பங்களாப் பராமரிப்பாளர் | 03 | |
| 3. உபகரணத் தொழிலாளர் | 04 | |
| 4. லொறிசாரதி உதவியாளர் | 03 | |

1.2 பதவிகளுக்கான கடமைகளின் தன்மை

| பதவி | பதவிக்குரிய பணிகள் |
|---|---|
| 1. திணைக்களத் தொழிலாளர் | அலுவலகமொன்றிலும், அலுவலக வளவுகளிலும் நாளாந்தம் செய்கின்ற சுத்திகரிப்பு, பராமரிப்பு பணிகள், திணைக்களத்தில் ஏனைய அலுவல்களின் போது தேவைக்கமையப் பணிக்கப்படும் தொழிலாளர்களுக்கான கடமைகளை நிறைவேற்றல், கடிதங்களை கோவைப்படுத்துதல், கடிதங்களை விநியோகித்தல், சுத்திகரித்தல், பொருட்களின் பாதுகாப்பு மற்றும் சாவிக் கடமைகள், உரியவிதத்தில் திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் பதவிக்கு ஏற்புடையதான கடமைகள். |
| 2. பங்களாப் பராமரிப்பாளர் | பங்களா வேலைகள், உணவு சமைத்தல் மற்றும் வழங்குதல், சமையல்அறை, பங்களா, முற்றம் ஆகியவற்றை சுத்தமாக பராமரித்தல், விருந்தினரை உபசரித்தல், பங்களாவின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பைப் பேணி வரல், விருந்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், உரிய விதத்தில் திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் பதவிக்கு ஏற்புடையதான கடமைகள். |
| 3. உபகரணத் தொழிலாளர் | பொருத்தக்கூடிய முகாம்களை அமைத்தல், பொருத்தும் முகாம்களைப் பழுதுபார்த்தலும், அதற்கு தேவையான பொருட்களை தயாரித்தலும், அளவை உபகரணங்களில் பாவிக்கப்படும் முக்காலிகளை பழுதுபார்த்தல், பொருத்தும் முகாம்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல், உரிய விதத்தில் திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் பதவிக்கு ஏற்புடையதான கடமைகள் |
| 4. லொறி சாரதி உதவியாளர் | லொறி கழுவுதல், சுத்திகரித்தல், கிரீஸ் தடவுதல், உரிய கருவிகள், வீதி விதிமுறைகள், சாரதிகளுக்கு உதவுதல், அவசர நிலைமைகளில் செயற்படுதல், சிறிய பழுதுபார்ப்புப் பணிகள். பாதுகாப்பு வழி முறைகள், தனியார் பாதுகாப்பு, உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் குறித்த அறிவு, உரிய விதத்தில் திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் பதவிக்கு ஏற்புடையதான கடமைகள். |

2. நியமிக்கப்படுவோர் தொகையும் நியமனத் திகதியும் நியமன அலுவலரினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமே அல்லது ஏதேனுமொரு எண்ணிக்கையை நிரப்பாமலிருக்க நியமன அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

*3. **சம்பளம் :***

| *தரம்* | *சம்பளப் படிமுறை* | *ஆரம்ப மாதச் சம்பளம்* |
|---|---|---|
| III ஆம் தரம் | *மாதாந்தம் ரூ. 11,730-10 x 120-10 x 130-10 x 145 - 12 x 160 - ரூ. 17,600 (பீஎல் 1-2006ஏ)* | *ரூ. 11,730* |
| II ஆம் தரம் | *மாதாந்தம் ரூ. 11,730-10 x 120-10 x 130-10 x 145 - 12 x 160 - ரூ. 17,600 (பீஎல் 1-2006ஏ)* | *ரூ. 13,060* |
| I ஆம் தரம் | *மாதாந்தம் ரூ. 11,730-10 x 120-10 x 130-10 x 145 - 12 x 160 - ரூ. 17,600 (பீஎல் 1-2006ஏ)* | *ரூ. 14,375* |
| விசேட தரம் | *மாதாந்தம் ரூ. 11,730-10 x 120-10 x 130-10 x 145 - 12 x 160 - ரூ. 17,600 (பீஎல் 1-2006ஏ)* | *ரூ. 15,840* |

*4. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இந்நியமனம் 03 வருட தகுதிகூர் நிலைக்கு உட்படுவதோடு, தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்தவொரு பகுதியிலும், சேவையாற்றுவதற்குத் தயாராகவிருத்தல் வேண்டும். இவ் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்திலுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனைகளுக்கும் உட்படுதல் வேண்டும்.*

5. **தகைமைகள் :**

*5.1 அடிப்படைத் தகைமைகள் :*

*(அ) ஓர் இலங்கைப் பிரசையாய் இருத்தல் வேண்டும்.*
*(ஆ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.*

*5.2 கல்வித் தகைமைகள் :*

*(அ) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்த பட்சம் இரண்டு திறமைச்சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*5.3 அனுபவம்.- விசேட தகைமையாகக் கருதப்படும்.*

*5.4 உடல்சார் தகைமைகள்.-ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையில் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றவும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் போதிய உடல்ரீதியிலானதும், மனோரீதியானதுமான தகைமைகள் கொண்டிருத்தல் வேண்டும்.*

*5.5 ஏனையவை :*

*1. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*2. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று சகலவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.*

***குறிப்பு**.- சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்குரிய தகைமைகள் அனைத்தையும் விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.*

*6. **பொய்யான தகவல் வழங்குதல்**.- இவ்வெற்றிடங்களை நிரப்புகையில் யாதேனுமொரு விண்ணப்பதாரருக்கு தகைமை இல்லையென்பது வெளிப்பட்டால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் ஏதேனுமொரு முக்கிய தகவலை அவரது அறிவிற்கு தெரிந்தவரை பிழையெனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனுமொரு முக்கிய தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பது தென்பட்டாலோ அவரை அரச சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.*

7. **ஆட்சேர்ப்பு முறைமை.**- கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுக்களுக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

7.1 கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை :

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய தலைப்புக்கள் | உச்சப்புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதைக் கவனத்தில் கொள்ளத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் தொகை |
|---|---|---|
| மேலதிகக் கல்வித் தகைமைகள் (அடிப்படை கல்வித் தகைமைகளுக்கு மேலதிகக் கல்வித் தகைமைகள்) | 40 | ஏற்புடையதாகாது |
| பதவிக்குரிய துறைசார் அனுபவம் | 30 | ஏற்புடையதாகாது |
| பதவிசார் துறை தொடர்பில் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றில் பயின்றுள்ள பாட நெறிகளும், பெற்றுள்ள பயிற்சியும் | 25 | ஏற்புடையதாகாது |
| நேர்முகப்பரீட்சையில் காண்பித்த திறன் | 05 | ஏற்புடையதாகாது |
| மொத்தம் | 100 | ஏற்புடையதாகாது |

8. **தெரிவுமுறை :**

8.1 நில அளவையாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடத்தப்படும் கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய திறமை ஒழுங்கு அடிப்படை மற்றும் வெற்றிட எண்ணிக்கை ஆகியவற்றுக்கு இசைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

9. **விண்ணப்பப்படிவங்களை தயாரித்தலும், சமர்ப்பித்தலும்.**- (அ) இவ்வறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப செ.மீ. 21 X 29 (ஏ4) அளவுத்தாளில் இருபக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரர்கள் தாமாகவே விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். இல. 01 முதல் 05 வரையான தலைப்புகள் 1 ஆம் பக்கத்திலும் இல. 6 முதல் 8.2 வரையான தலைப்புக்கள் 2 ஆம் பக்கத்திலும், இல. 9 முதல் 11 வரையான தலைப்புக்கள் 3 ஆம் பக்கத்திலும் இல. 12 வரையான தலைப்புக்கள் 4 ஆம் பக்கத்திலும், உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ) தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையின்கீழ் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின்கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அவற்றைத் தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ உரிய முறையில் விண்ணப்பங்களை நிரப்பாமையினால் நிகழும் விளைவுகளை விண்ணப்பதாரர்களே தாங்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழல் பிரதியொன்றைத் தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் அறிவித்தலுடன் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கிறதா என விண்ணப்பதாரர் பரிசீலித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

9.1 விண்ணப்பப்படிவம் வைத்தனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “ஆரம்ப மட்ட தேர்ச்சியற்ற பதவி வகைகளுக்கான ஆட்சேர்ப்பு” எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

10. **விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்.**- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2013.11.29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்க்காணும் முகவரிக்குக் கிடைக்கத்தக்கதாகப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் :-

நிலஅளவையாளர் நாயகம்,
நிலஅளவைத் திணைக்களம்,
இல. 150, கிருல வீதி,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 5.

11. இங்கு குறிப்பிடாத ஏதும் விடயமிருப்பின், அது தொடர்பில் நிலஅளவை நாயகத்தால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் காணப்படும் நியமனங்களுக்கான பொது விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

கே. தவலிங்கம்,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவையாளர் நாயகம் திணைக்களம்,
கொழும்பு 5,
2013.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்ப மட்ட தேர்ச்சி அற்ற (PL 01-2006A) பதவிகளிற்குஆட்சேர்ப்பு**

(அலுவலகப் பயன்பாட்டுக்கு மாத்திரம்)

1. ஆட்சேர்ப்புக்கான பதவிகளுக்குள் நியமனம்பெற விரும்பும் பதவிகளின் ஒழுங்குவரிசை மிகக்கூடிய விருப்பமுள்ள பதவிக்கு இலக்கம் 1 ஐயும் விருப்பம் குறையும் ஒழுங்கு வரிசைக்கமைய ஏனைய பதவிகளுக்கு 02, 03, ...... என வரிசைப்படுத்தி விரும்பும் இலக்கங்களைக் குறிப்பிடுக.

| தொடர் இல. | பதவிப்பெயர் | விருப்பு இல. |
|---|---|---|
| 1 | திணைக்களத் தொழிலாளர் | |
| 2 | பங்காளப் பராமரிப்பாளர் | |
| 3 | உபகரணத் தொழிலாளி | |
| 4 | லொறிச்சாரதி | |

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு/திருமதி/செல்வி) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

2.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

3. தேசிய அடையாள அட்டை இல. ..........................

4. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4.1 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5. பால் : (ஆண் - M, பெண் - F) ☐

6. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :----.

6.1 முகவரி சார்ந்த நிர்வாக மாவட்டம் (அட்டவணை 1 ஐ பார்க்கவும்) :

மாவட்ட இலக்கம் ☐ மாவட்டத்தின் பெயர் ☐

6.2 எப்போதிலிருந்து அம் மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள் ? :----.

7. தொலைபேசி இலக்கம்:

நிலையான:----. கையடக்க:----.

8. **கல்வித் தகைமைகள்:**

8.1 க.பொ.த. (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள் :
முதலாவது அமர்வு:

(1) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(2) சுட்டிலக்கம் :----.
(3) சித்தியெய்திய பாடங்கள்

*அட்டவணை - இல. 1*

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

*பெறப்பட்டுள்ள அதியுயர்தரத்திலிருந்து தொடங்கி தர ஒழுங்கில் பாடங்களை குறிப்பிடவும்.

8.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரங்கள்:
இரண்டாவது அமர்வு:

(1) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(2) சுட்டிலக்கம் :----.
(3) சித்தியெய்திய பாடங்கள்

*அட்டவணை - இல. 02*

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

*பெறப்பட்டுள்ள அதியுயர்தரத்திலிருந்து தொடங்கி தர ஒழுங்கில் பாடங்களை குறிப்பிடவும்.

9. குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா?

ஆம் ☐ இல்லை ☐

9.1 ஆம் எனின் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக? :----.

10. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானதும், சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இப் பிரகடனம் பொய்யானதென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விபரத்தையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ............................................................................ என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளேன் எனவும் அவர் ................................................ ஆந் திகதி என் முன்னிலையில் மேலே கையொப்பமிட்டதாகவும் உறுதி செய்கின்றேன்.

----.
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர்:----.
பதவிப் பெயர்:----.
முகவரி----.
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)
திகதி:----.

12. **திணைக்களத் தலைவரின் பரிந்துரை:**
(அரச/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

12.1 உத்தியோகத்தரின் சுயவிபரக்கோவைக்கமைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்குள் வேலை, நடத்தை, வரவு திருப்தியானது/திருப்தியற்றது. சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார்/ உழைக்கவில்லை. எந்தவோர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உள்ளாகவில்லை/உள்ளாகியுள்ளார்.

12.2 விண்ணப்பித்துள்ள பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து இவ்வுத்தியோகத்தரை விடுவிக்க முடியும்/ முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி முத்திரை:----.
திகதி:----.

## அட்டவணை I

மாதிரி விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இல. 06, I இல் குறிக்கப்படும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ் அட்டவணை ஏற்புடையது.

| நகரங்கள்/மாவட்டங்கள் | நகர/மாவட்ட இலக்கம் |
|---|---|
| 1. கொழும்பு | 01 |
| 2. கம்பஹா | 02 |
| 3. களுத்துறை | 03 |
| 4. கண்டி | 04 |
| 5. மாத்தளை | 05 |
| 6. நுவரெலியா | 06 |
| 7. காலி | 07 |
| 8. மாத்தறை | 08 |
| 9. அம்பாந்தோட்டை | 09 |
| 10. குருணாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அனுராதபுரம் | 12 |
| 13. பொலன்னறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொனராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

நில அளவைத் திணைக்களம்

**நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்ப மட்ட அரை தேர்ச்சிபெற்ற (PL 02 - 2006 A) பதவி வகைக்கான ஆட்சேர்ப்பு**

1. நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள ஆரம்பமட்ட பகுதி தேர்ச்சிபெற்ற (PL 02 - 2006 A) பதவி வகைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1

| ஆட்சேர்ப்புக்கான பதவி | வெற்றிடங்களின் தொகை | தரம் |
|---|---|---|
| (i) தச்சுவேலையாளர் | 07 | III |
| (ii) படங்களைப் புதுப்பிப்பவர் | 02 | III |
| (iii) ஒளிப்படம் கழுவும் உதவியாளர் | 01 | III |
| (iv) படஸ்திரப்படுத்துனரும் புத்தகம் கட்டுனரும் | 02 | III |
| (v) வளிச்சீராக்கித் தொழில்நுட்பவியலாளர் | 01 | III |
| (vi) மோட்டார் இயந்திர திருத்துநர் | 02 | III |
| (vii) மேசன் | 01 | III |

1.2 பதவிகளுக்கான கடமைகளின் தன்மை

| பதவி | பணிகள் |
|---|---|
| தச்சுவேலையாளர் (தியத்தலாவை மற்றும் கொழும்பில் மாத்திரமே வெற்றிடம் நிலவுகின்றது) | முக்காலிகளின் பழுதுபார்ப்பு மற்றும் ஏனைய உபகரணங்களுக்கான பழுதுபார்ப்பு வேலைகள் |
| படங்களைப் புதுப்பிப்பவர் (கொழும்பில் மாத்திரமே வெற்றிடம் நிலவுகின்றது) | புத்தகம் கட்டுதலும், படங்களைப் புதுப்பித்தலும் |
| ஒளிப்படம் கழுவும் உதவியாளர் (கொழும்பில் மாத்திரமே வெற்றிடம் நிலவுகின்றது) | ஒளிப்படக் கடதாசி மற்றும் படச்சுருள்களை இருட்டறையில் விரித்தல் முதல் கழுவிக் காயவைத்தல் வரையான சகல பணிகளிலும் உதவியாளருக்கான கடமைகளில் ஈடுபடுதல். வான்முறை ஒளிப்படப்பிடிப்பின்போது தேவைப்படும் இரசாயனப் பொருட்கள் கச்சா படச்சுருள்கள் மற்றும் படப்பிடிப்பு உபகரணங்களை குறித்த இடங்களுக்குக் கொண்டுசெல்லுதலும் மீளக்கொணர்தலும் இரசாயனப் பொருட்களை கலவை செய்வதிலும், களஞ்சியப்படுத்தலிலும் உதவியாளருக்கான சகல காரியங்களிலும் ஈடுபடுதல் ஒளிப்பட அச்சுப்பணிகளின் முடிவிலும் குறித்துக்கூறும் காலப்பகுதிகளிலும் உரிய பொருட்களையும் உபகரணங்களையும், சுத்தமாய்ப் பேணிப் பராமரித்தல் மேற்கண்டவற்றுக்கு மேலதிகமாக இப் பதவிக்குரித்தானதாய் நில அளவை அத்தியட்சகர் (வான்முறை அளவை) மூலம் காலத்திற்குக் காலம் பணிக்கப்படும் ஏனைய கடமைகளிலும் ஈடுபடுதல். |
| பட ஸ்திரப்படுத்துநரும் புத்தகம் கட்டுநரும் (கொழும்பில் மாத்திரமே வெற்றிடம் நிலவுகின்றது) | புத்தகம் கட்டுதலும் வரைபடம் திருத்துதலும் |
| வளிச்சீராக்கித் தொழில்நுட்ப உதவியாளர் (கொழும்பில் மாத்திரமே வெற்றிடம் நிலவுகின்றது) | வளிச்சீராக்கி இயந்திர அறையை நடத்திச் செல்லல் |
| மோட்டார் இயந்திர திருத்துநர் (கொழும்பில் மாத்திரமே வெற்றிடம் நிலவுகின்றது) | வாகனங்களில் சிறு பழுதுபார்ப்புகள் மற்றும் சேவைப் பராமரிப்புகள் மேற்கொள்ளல். |
| மேசன் (கொழும்பில் மாத்திரமே வெற்றிடம் நிலவுகின்றது) | கட்டிட நிர்மாணத்துறை நடவடிக்கைகளும் பழுதுபார்ப்புகளும் |

2. நியமிக்கப்படுவோர் தொகையும் நியமனத் திகதியும் நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும் வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது ஏதேனுமொரு தொகையை நிரப்பாமலிருக்கவோ நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3. **சம்பளம்** -

| தரம் | சம்பளப் படிமுறை | ஆரம்ப மாதச் சம்பளம் |
|---|---|---|
| III ஆம் தரம் | மாதாந்தம் ரூ. 12,210-10X 130-10X 145-10X160-12X170 - ரூ. 18600 (பீஎல் 2-2006ஏ) | ரூ. 12,210 |
| II ஆம் தரம் | மாதாந்தம் ரூ. 12,210-10X 130-10X 145-10X160-12 X 170 - ரூ. 18,600 (பீஎல் 2-2006ஏ) | ரூ. 13,655 |
| I ஆம் தரம் | மாதாந்தம் ரூ. 12,210-10X 130-10X 145-10X160-12X 170 - ரூ. 18,600 (பீஎல் 2-2006ஏ) | ரூ. 15,120 |
| விசேட தரம் | மாதாந்தம் ரூ. 12,210-10X 130-10X 145-10X160-12X 170 - ரூ. 18,600 (பீஎல் 2-2006ஏ) | ரூ. 16,730 |

4. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இந்நியமனம் 03 வருட தகுதிகாண் நிலைக்கு உட்படுவதோடு, தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்தவொரு பகுதியிலும், சேவையாற்றுவதற்குத் தயாராகவிருத்தல் வேண்டும். இவ் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்திலுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனைகளுக்கும் உட்படுத்தல் வேண்டும்.

5. **தகைமைகள் :**

5.1 அடிப்படைத் தகைமைகள் :

(அ) ஓர் இலங்கைப் பிரசையாய் இருத்தல் வேண்டும்.
(ஆ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5.2 கல்வித் தகைமைகள் :

(அ) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்த பட்சம் இரண்டு திறமைச்சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

5.3 தொழில்சார் தகைமைகள்.- குறித்த பதவிக்குரிய தொழில்நுட்ப நிபுணத்துவத்தை, மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில் தகைமைகளில் (NVQ) மூன்றாவது மட்டத்திற்குச் சமனானதாகப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.4 அனுபவம்.- விசேட தகைமையாகக் கருதப்படும்.

5.5 உடல்சார் தகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றப் போதிய உடல்ரீதியானதும், மனோரீதியானதுமான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.6 **ஏனையவை :**

(i) விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்பாக சகலவிதத்திலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்குரிய தகைமைகள் அனைத்தையும் விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.

6. **பொய்யான தகவல் வழங்குதல்**.- இவ்வெற்றிடங்களை நிரப்புகையில் யாதேனுமொரு விண்ணப்பதாரருக்கு தகைமைகள் இல்லையென்பது வெளிப்பட்டால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட

பின்னரெனினும் விண்ணப்பதாரர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவலை அவர் அது பிழையெனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனுமொரு முக்கிய தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பது தென்பட்டாலோ அவரை அரச சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.

7. **ஆட்சேர்ப்பு முறைமை**.- கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுக்களுக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

7.1 கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை :

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய தலைப்புக்கள் | உச்சப்புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதைக் கவனத்தில் கொள்ளத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் தொகை |
|---|---|---|
| மேலதிகக் கல்வித் தகைமைகள் | 40 | ஏற்புடையதாகாது |
| பதவிக்குரிய துறைசார் அனுபவம் | 30 | ஏற்புடையதாகாது |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 25 | ஏற்புடையதாகாது |
| நேர்முகப்பரீட்சையில் காண்பித்த திறன் | 05 | ஏற்புடையதாகாது |
| மொத்தம் | 100 | ஏற்புடையதாகாது |

8. **தெரிவுமுறை** :

8.1 நில அளவையாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடத்தப்படும் கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய, முதலில் பெறுபேறுகளின் திறமை ஒழுங்கு அடிப்படை மற்றும் இரண்டாவதாக பதவிக்கான விருப்புத் தெரிவு ஆகியவற்றுக்கு இசைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

9. **விண்ணப்பப்படிவங்களை தயாரித்தலும், சமர்ப்பித்தலும்**.- (அ) இவ்வறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப செ.மீ. 21X29 (ஏ4) அளவுத்தாளில் இருபக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரர்கள் தாமாகவே விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். இல. 01 முதல் 4.1 வரையான தலைப்புகள் 1 ஆம் பக்கத்திலும் இல. 5 முதல் 8.2 வரையான தலைப்புக்கள் 2 ஆம் பக்கத்திலும், இல. 9 முதல் 13 வரையான தலைப்புக்கள் 3 ஆம் பக்கத்திலும் இல் 14 முதல் 14.2வரையான தலைப்புக்கள் 4 ஆம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(இ) உரிய முறையில் விண்ணப்பங்களை நிரப்பாமையினால் நிகழும் விளைவுகளை விண்ணப்பதாரர்களே தாங்கிக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றைத் தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் அறிவித்தலுடன் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கின்றதா என விண்ணப்பதாரர் பரிசீலித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

9.1 விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆரம்பமட்ட பகுதி தேர்ச்சிபெற்ற பதவி வகைகளுக்கான ஆட்சேர்ப்பு - திறந்த" எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

10. **விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்**.- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2013.11.29 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்க்காணும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் :-

நில அளவையாளர் நாயகம்,
நில அளவைத் திணைக்களம்,
இல. 150, கிருல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.

11. இங்கு குறிப்பிடப்படாத ஏதும் விடயமிருப்பின், அது தொடர்பில் நில அளவையாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும்.

கே. தவலிங்கம்,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு 05.
2013.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்ப மட்ட அரை தேர்ச்சிபெற்ற (PL 02-2006 A) பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு**

(அலுவலகப் பயன்பாட்டுக்கு மாத்திரம்)

1. ஆட்சேர்ப்புக்கான பதவிகளுக்குள் நியமனம்பெற விரும்பும் பதவிகளின் ஒழுங்குவரிசை மிகக்கூடிய விருப்பமுள்ள பதவிக்கு இலக்கம் 1 ஐயும் விருப்பம் குறையும் ஒழுங்கு வரிசைக்கமைய ஏனைய பதவிகளுக்கு 02, 03, ...... என வரிசைப்படுத்தி விரும்பும் இலக்கங்களைக் குறிப்பிடுக.

| தொடர் இல. | பதவிப்பெயர் | விருப்பு இல. |
|---|---|---|
| 1 | தச்சு வேலையாளர் | |
| 2 | படங்களை புதுப்பிப்பவர் | |
| 3 | ஒளிப்படம் கழுவும் உதவியாளர் | |
| 4 | வரைபட திருத்துநரும், புத்தகம் கட்டுநரும் | |
| 5 | வளி சீராக்கித் தொழில்நுட்பவியலாளர் | |
| 6 | மோட்டார் இயந்திர திருத்துநர் | |
| 7 | மேசன் | |

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு/திருமதி/செல்வி) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

2.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

3. தேசிய அடையாள அட்டை இல. ...........................

4. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4.1 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5. பால் : (ஆண் - M, பெண் - F) ☐

6. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :----.

6.1 முகவரி சார்ந்த நிர்வாக மாவட்டம் (அட்டவணை 1 ஐ பார்க்கவும்) :

மாவட்ட இலக்கம் ☐ மாவட்டத்தின் பெயர் ☐

6.2 எப்போதிலிருந்து அம் மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள் ? :----.

7. தொலைபேசி இலக்கம்:

நிலையான:----. கையடக்க:----.

8. **கல்வித் தகைமைகள்:**

8.1 க.பொ.த. (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள் :
முதலாவது அமர்வு:

(1) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(2) சுட்டிலக்கம் :----.
(3) சித்தியெய்திய பாடங்கள்

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

8.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரங்கள்:
இரண்டாவது அமர்வு:

(1) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(2) சுட்டிலக்கம் :----.
(3) சித்தியெய்திய பாடங்கள்

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

9. தொழில்சார் தகைமைகள் :----.

10. வேறு தகைமைகள் :----.

11. நீர் குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :-

ஆம் ☐ இல்லை ☐

11.1 'ஆம்' எனின் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக? :----.

12. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானதும் சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இப் பிரகடனம் பொய்யானதென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விபரத்தையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

13. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ............................................................................ என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளேன் எனவும் அவர் ................................................ ஆம் திகதி என் முன்னிலையில் மேலே கையொப்பமிட்டதாகவும் உறுதி செய்கின்றேன்.

----.
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர்:----.
பதவிப் பெயர்:----.
முகவரி----.
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)
திகதி:----.

14. **திணைக்களத் தலைவரின் பரிந்துரை:**
(அரச/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

14.1 உத்தியோகத்தரின் சுயவிபரக்கோவைக்கமைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்குள் வேலை, நடத்தை, வரவு திருப்தியானது/திருப்தியற்றது. சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார்/ உழைக்கவில்லை எந்தவோர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உள்ளாகவில்லை/உள்ளாகியுள்ளார்.

14.2 விண்ணப்பித்துள்ள பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து இவ்வுத்தியோகத்தரை விடுவிக்க முடியும்/ முடியாது. இவ்விண்ணப்பப்படிவத்தினை சிபாரிசு செய்கிறேன்./ செய்யவில்லை.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி முத்திரை:----.
திகதீ:----.

**அட்டவணை 1**

மாதிரி விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இல. 06.1 இல் குறிக்கப்படும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ் அட்டவணை ஏற்புடையது.

| நகரங்கள்/மாவட்டங்கள் | நகர/மாவட்ட இலக்கம் |
|---|---|
| 1. கொழும்பு | 01 |
| 2. கம்பஹா | 02 |
| 3. களுத்துறை | 03 |
| 4. கண்டி | 04 |
| 5. மாத்தளை | 05 |
| 6. நுவரெலியா | 06 |
| 7. காலி | 07 |
| 8. மாத்தறை | 08 |
| 9. அம்பாந்தோட்டை | 09 |
| 10. குருணாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அனுராதபுரம் | 12 |
| 13. பொலன்னறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொனராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

11-59/2

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, மார்கழி மாதம் 02 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஐப்பசி 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | ஹிக்கடுவ | கோணபினுவெல பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வெல்லபடபத்துவ பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், காலி |

11-84

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும்** www.documents.gov.lk **எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

*5.* ***சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

*6.* ***நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*7.* ***கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

*11.* ***வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி*** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*12.* ***ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

*13.* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.***

*14.* ***2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

***முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.***

***தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்***

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

***எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.***

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை-2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.10.2013 |
| | | வெள்ளி | 08.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2013 |
| | | வெள்ளி | 15.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2013 |
| | | வெள்ளி | 22.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2013 |
| | | வெள்ளி | 29.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.11.2013 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2013 |
| | | வெள்ளி | 13.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2013 |
| | | வெள்ளி | 20.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2013 |
| | | வெள்ளி | 27.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2013 |

**அட்டவணை-2014**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 03.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.12.2013 |
| | | வெள்ளி | 10.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.12.2013 |
| | | வெள்ளி | 17.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.01.2014 |
| | | வெள்ளி | 24.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.01.2014 |
| | | வெள்ளி | 31.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.01.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.